
# பார்வை

PARVAI



AVRIL
சித்திரை
APRIL

## தரம்... மலிவு...

இந்திய இலங்கை சுவையுடைய
உணவுப் பொருட்கள்

இந்தி தமிழ் வீடியோ படங்கள்


மலிவாகவும் தரமாகவும்
பெற்றுக்கொள்ளுங்கள்...

# ஸ்ரீ சே ராஜ்


**Raj Ent.** 276-9262

444 Jean Talon W. Montreal
Quebec. H3N 1P9

# ஆசிரியர் பக்கம்



APRIL 1989

" இலக்கிய வளர்ச்சி அறிவுத்துறைகளை புறக்கணித்த வளர்ச்சியாய் இருத்தல் இயலாது. ஏனென்றால் முன்னேறாத ஒரு மொழியின் இலக்கியம் முற்போக்கானதாக அமையாது. மொழி முன்னேற வேண்டுமானால் அதனைப் பேசும் மக்கள் முன்னேற வேண்டும். அந்த மக்களின் பொருளியல் வர்த்தக விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகள் யாவும் முன்னேறியிருக்க வேண்டும். இந்தப் பல்துறைமுன்னேற்றத்தின் உயர்புள்ளதொரு கருவியாக அந்த மக்களின் மொழி பயன்பட வேண்டும். - முருகையன் "

வளமுள்ளதும் பழைமையானதுமான ஒரு மொழிக்கு சொந்தக்காரர் நாம். இன்று எங்கள் மொழியின் நிலைமை என்ன?

ஒரு மொழியின் வளர்ச்சி கதைகளாலும், கவிதைகளாலும் காவியங்களாலும் திரைப்பட வசனங்களாலும் மாத்திரம் மேன்மையுறுவதில்லை.

விஞ்ஞான தொழில் நுட்ப அறிவுத்துறை சார்ந்து எமது மொழி வளர்ச்சியடைந்துள்ளதா? இல்லையென்றே சொல்ல வேண்டும். இது மொழியின் குறையன்று. அதனைப் பேசும் மக்களின் குறைபாடே. இதற்கு அரசியல், பொருளாதார - சமூகக் காரணங்கள்

பல இருக்கலாம். இருப்பினும் விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் சிறந்த தமிழர்கள் கூட சொந்த மொழியை உகந்த மொழியாக ஏற்றுக் கொள்ளும் நிலைமையையும் தமது அறிவை மொழி வளர்ச்சிக் கென பயன்படுத்தும் நிலைமையும் இல்லை.

ஆகவே இந்நிலைமை தொடருமாயின் பாரதி சொன்னது போல மெல்லத் தமிழ் இனிச் சாகும் - தமிழ் பேசும் மக்கள் சிந்திக்க வேண்டிய காலம் இது.

— செல்வம்.

28ம் பக்க தொடர்ச்சி.

உண்மையில் எமது தேசத்தின் விடுதலைப் போராட்டம் செல்ல வேண்டிய திசை வழி என்ன, அதில் இந்தியா வகிக்கும் பாத்திரம் என்ன என்பதை சரிவர மதிப்பிடாமையில் இருந்தே இத்தகைய குழப்பம் ஏற்படுகிறது. தமிழீழம் பிரிவதை அனுமதிக்காத இந்தியாவுடன் ராஜதந்திர ரீதியாக நண்பனை பிடிப்பது என்பது எந்த வகையில் தமிழீழக் கனவை நனவாக்க உதவும் என்பது புரியவில்லை. இது குமார்மூர்த்தி முதலே சொன்ன 'இந்தியாவின் பிராந்திய நலனை பாதுகாக்க வந்திருக்கும் இந்திய படையுடன்' மோதாமல் இருப்பது தான் என்றால், அது அவரே சொன்ன தமிழ் தேசிய இனம் சுயாதிக்கம் கொண்ட ஒரு தனிநாட்டை அமைக்க உதவி செய்யுமா?

உங்கள் பத்திரிகையின் வளர்ச்சிக்கு என் வாழ்த்துக்கள். பத்திரிகையை ஒரு கருத்து விலகாத களமாகவும் பாவியுங்கள். பயனுள்ளதாக இருக்கும்.

நன்றி

அன்புடன்

அரவிந்தன்

தமிழர் ஒளி
வெளியீடு

ஆசிரியர்:
செல்வம்

இணையாசிரியர்
ஜெயராஜ்

தட்டச்சு:
யோகன்

வடிவமைப்பு:
மூர்த்தி

விளம்பர நிர்வாகம்
வே. ராஜலிங்கம்.

# பார்வை

# PARVAI

**THAMILAR OLLI ASSOCIATION INC**
1225 ST. MARC, SUITE 206
MONTRÉAL, QUÉ. H3H 2E7

# உங்கள் சேவையில் 'கான்பை'

## மலிவு... மலிவு...மலிவு... மலிவு...மலிவு...

உங்கள் தேவை
எங்கள் சேவை

இலங்கை இந்திய கனேடிய
உணவுப்பொருட்களையும்


உங்களுக்குத் தேவையான எல்லாவித
* பலசரக்கு வகைகள்
* அன்றாடபாவனைப்பொருட்கள்
* காய்கறி வகைகள்

எல்லாவற்றையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள

# CAN BUY

5692 VICTORIA AVE MONTREAL
TEL: 345-8622

சகல விதமான இறைச்சிவகைகளும்
எம்மிடம் உண்டு




உங்கள்
தளபாடங்களை
ஏற்றி இறக்க
எங்களையே நாடுங்கள்

# கார்கோட்டின் குறிப்புகள்

சிறீலங்கா இந்திய அரசுகள் தமிழ் மக்களை, போராட்டத்தை கைவிட்டு இலங்கை ஒற்றையாட்சியை ஏற்று பாராளுமன்ற ஜனநாயக தேர்தலுக்குள் குதிக்குமாறு (சரணாகதி அடையுமாறு) நிர்ப்பந்திக்கின்றன. T.U.L.F , EPRLF . ENTLF ,TELO போன்ற அமைப்புகளும் இதை வலியுறுத்துகின்றன. தமிழ் தேசிய இனம் சமூக பொருளாதார அரசியல் வழிகளில் ஒடுக்கப்பட்டதன் காரணமாக தனது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தது. இப்போராட்டத்தை கைவிடுவதாயின் சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறைகளுக்கு முடிவு காணப்பட்டிருக்க வேண்டும்,

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பின் இலங்கை அரசியல் அமைப்புச் சட்ட பதின்மூன்றாவது திருத்தப்படி மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தமிழ்தேசிய இனம் தனது பாரம்பரிய நிலத்தையும், பொருளாதார, மொழி கலாச்சார, கல்வி போன்றவற்றை பாதுகாத்துக் கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளதா?

இவ் அரசியல் அமைப்பு சட்ட திருத்தங்களின் படி வடக்கு கிழக்கு இணைப்பு தற்காலிகமானது. அது அருகருகே உள்ள இரண்டு அல்லது மூன்று மாகாணங்களை ஒன்றாக இணைப்பதற்கும் சிறீலங்கா பாராளுமன்றத்துக்கு அதிகாரமளித்துள்ளது.

ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இரு மாகாணங்களையே

இணைக்கலாம் என இச் சட்டம் கூறுகின்ற வேளை வடக்கு கிழக்கு மாகாணங்களின் தொடர்ச்சியான தன்மைகளை இல்லா தொழிப்பதற்கான சகல திட்டங்களையும் சிறீலங்கா அரசு செயலாற்றி வருகின்றது. புதிய சிங்கள குடியேற்றங்கள் வேகமாக நடைபெறுகின்றன. (வெளிவந்துள்ள தகவல்களின் படி சிறீலங்கா, இந்திய ஒப்பந்தத்துக்கு பின் தமிழ் தேசிய இனத்தின் நிலத்தின்மேல் 1 1/2 இலட்சம் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரிய நிலங்களில் தான் விரும்பியவாறு குடியேற்றங்களை நிகழ்த்த " அரசாங்க நிலம் " என்று கூறி அவற்றில் நீர்பாசன காணி அபிவிருத்தி தேசிய இன விகித அடிப்படையில் காணிகளை டங்கிடல் என்பதன் பேரால் முழு (சட்ட ரீதியான தே) அதிகாரங்களையும் சிறீலங்கா அரசு கொண்டுள்ளது.

தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரிய நிலங்களில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களையோ, நில அபகரிப்பையோ தண்டாடலையோ தடுத்த நிறுத்தும் எந்த அதிகாரமும் மாகாண சபைக்கு இல்லை.

மாகாணத்துக்கான நிதி விடயங்கள் அனைத்தும் ஆளுனரால் ஆக்கப்படும் விதிகளிலல் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். என கூறும் மாகாண சபை சட்டம் தமிழ் தேசிய இனம் தன்

பொருளாதார வளர்ச்சிக்கும் புனர் நிர்மாணப்பணிக்கும் சிறிலங்கா அரசின் ( சிங்கள பேரினவாதிகளின் ) பாராளு மன்றத்தையே நம்பி இருக்க வேண்டும்என்பதை தெளிவுபடுத்து கின்றது .

தமிழ் தேசிய இனம் தனது பாதுகாப்புக்கு சொந்தமான படையை வைத்திருப்பதை மாகாண சபை சட்டம் திட்டவட்டமாக மறுத்து விட்டது. ஜனாதிபதி ,தேசிய பொலிஸ் ஆணைக்குழு, ஐ.ஜி.பி. டி.ஐ.ஜி.பி என்பதுடன் அதிகாரப் பரவலாக்கம் நிறுத்தப்பட்டு விட்டது. மாகாண பொலிஸ் ஆணைக்குழுவுக்கோ , முதலமைச்சருக்கோ எவ்வித அதிகாரமும் இல்லை.

தமிழை அரசகரும மொழியாக நடைமுறைப்படுத்து வதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் சட்டம் இயற்றும் அதிகார மும் பாராளு மன்றத்துக்கே வழங்கப்பட்டுள்ளது. மாகாண சபைக்கு கிடையாது.

' பொது மக்கள் பாதுகாப்பு சட்டம்' என்ற ஒரு நரித்தனமான பெயரிடப்பட்ட மக்கள் விரோத பாசிச சட்டத்துக்கு உட்பட்டுத்தான் மாகாணசபை இயங்க வேண்டும். இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அல்லது இந்த பொது மக்கள் பாதுகாப்பு சட்டம் "மீறப்படின் அல்லது மீறப்படும் என ஜனாதிபதியால் கருதப்பட்டால் அந்த நிலைமைகளை ஒடுக்க இந்த மாகாண சபை கடமைப்பட்டது. அதை நிறைவேற்றத்தவறின் இச்சபை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட

ஆளுனரால் எவ்விதமான விளக்கமும் , கேள்வியும் கேட்கப்படாமல் கலைக்கப்படும். இதைபற்றி எந்த நீதிமன்றத்திலும் கேள்வி கேட்க முடியாது.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையை கோருவது இலங்கையின் பாதுகாப்பை அச்சுறுத்துகிற விடயமாயும் பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தை மீறுகின்ற விடயமாயுமே சிறிலங்கா அரசுக்கு இருக்கும் என்பது புரிந்து கொண்டதே. எனவே தமிழ் மக்களை ஒடுக்குவதற்கே மாகாணசபை கடமைப்பட்டுள்ளதையும் நாம் உணரமுடிகின்றது.

அரசியல் அமைப்பு பதின்மூன்றாவது சட்ட திருத்தப்படி இந்த மாகாண சபைக்கு தமிழ் தேசிய இனத்தின் பிரதேசத்தை, பொருளாதாரத்தை, பாதுகாப்பு, மொழி, கல்வி கலாச்சாரம் இவற்றில் எதனை கூட பாதுகாப்பதற்கு அதிகாரம் இல்லை என்பதையும் மாறாக உரிமைகளை கேட்கும் தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான அதிகாரத்தை வைத்துள்ளதையும் தெளிவாக தெரிந்து கொள்ளலாம்.

இந்நிலையில் தமிழ் தேசிய இனத்தை நோக்கி போராட்டத்தை கைவிட்டு மாகாண சபையை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்பது அயோக்கியத்தனமான, தமிழர்களை பேரினவாத ஒடுக்கு முறை படுகுழிக்குள் குப்புறதள்ளிவிடும் தந்திர முயற்சி என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்வார்கள்.

நமது தேசத்தை விட்டு வெளியேறி மேலை நாடுகளில் ஏராளம் பேர் உள்ளனர். இவர்களில் மிகப்பலர் தமிழீழப் போராட்டத்தின் அரசியல் தவறுகளால் விரட்டியடிக்கப்பட்டவர்கள். வெறும் சம்பாதிக்கும் நோக்கத்தில் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களில் இருந்து முற்றிலும் இவர்கள் வேறு பட்டவர்கள். தமிழீழ பே ாராட்டம் முனைப்புற்ற காலத்தில் இவர்களில் பலர் இப்போராட்ட அமைப்புகளின் முன்னணிச் சித்தாந்திகளாகவும் முன்னனித் தலைவர்களாகவும் இருந்துள்ளனர். இவ்வாறு பல ஆயிரக்கணக்கான இளைஞர்களை போராட்டத் தவறுகள் ஓட விரட்டியுள்ளது. இவ்வாறு மேலை நாடுகளில் குடிபெயர்ந்துள்ள சக்திகள் ஒரு பெரும் மூலவளமாய்க் காணப்படுகின்றனர். இவர்களின் மத்தியில் எந்த அரசியல் பணிகளும் ஆற்றப்படாமை மேன்மேலும் மேலைத் தேய சீரழிவுக்குள் இவர்களைத் தள்ளி வருகின்றது. இதை தடுத்து நிறுத்த இயலாதா? இவர்கள் மத்தியில் ஒரு அரசியல் பணி ஆற்றப்பட முடியாதா? இதில் முன் கை எடுக்க யாராயினும் சிலர் அல்லது ஒருவர் முயலக் கூடாதா? இது ஒரு பிரதானமான கேள்வி.

ஒரு புரட்சியாளன் எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். அவன் சொந்த நாட்டில் ,இருந்தால் தியாகி,வெளிநாட்டில் இருந்தால் துரோகி என்பது அபத்தம். எங்கு இருக்கிறான் என்பது இல்லை, என்ன செய்கிறான் என்பதே பிரதானமானது.

விடுதலைப் பணிகளுக்கான சக்திகளும், வசதி வாய்ப்புகளும் உங்கள் முன்னால் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் எல்லாருமே தங்கள் மனத்திருப்திக்கு ஏதோ செய்து விட

அல்லது மனவிரக்திக்கு வடிகால் அமைக்க (கலை, இலக்கியம்) என முயல்கின்றனரே தவிர தமது ஒட்டு மொத்தமான கடமையை புரிந்து கொண்டவர்களாக இல்லை. புரட்சியின் நலனில் இருந்து சிந்திப்பவர்களாக இல்லை.

இவை குறித்து இவர்கள் தெளிவாக தீவிரமாக ? சிந்திப்பது அவசியம்.

நம் தேசத்திலிருந்து வந்த ஒரு கடிதக் குறிப்பு இவ்வாறு கூறுகின்றது. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? கேள்வியுடன் மட்டும் நான் நிறுத்துகிறேன்.

மக்களின் ஜனநாயக உரிமைக்காகவும் தேசத்தை புனர் நிர்மானம் செய்வதற்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைதியை ஏற்படுத்தவும் தான் செயற்படுவதாக E.P.R.L.F மக்கள் மத்தியில் பிரச்சாரங்களை முடுக்கி யிருப்பது அறிந்ததே.

சிறிலங்கா இராணுவக் கொலைகாரங்களுக்கிடையில் தவித்துக் கொண்டிருந்த தமிழ் மக்கள் மேல் இந்திய ஆக்கிரமிப்பு ப்படைகள் கொடூரமான யுத்தத்தை தொடுத்து ஒரு இரத்த வெள்ளத்தை பெருக்கோடச் செய்தபோது, நம் தேசத்துப் பெண்களை ஆக்கிரமிப்பாளன் துகிலுரிந்து சித்திரவதைகள் செய்த போது பட்டினியும், படுகொலையுமாய் மக்கள் தவித்தபோது

"இப்படியான யுத்தத்தில் இழப்புகள் தவிர்க்க முடியாதவை" என்றும் " பொது மக்கள் தாங்களாகவே ஒதுங்காவிட்டால் அவர்கள் காயமடைவதை தடுக்க முடியாது என்றும் இந்த ஆக்கிரமிப்பாளனுக்கும், அவனது வெறித்தனத்துக்கும் E.P.R.L.F செயலதிபர் வக்காலத்து வாங்கியதை அவர் மறந்து போயிருக்கலாம்.

துப்பாக்கி பிரயோகம் செய்து மக்களை, மாணவரை கொலை செய்தும், பெண்களை கற்பழித்து, அப்பாவி மக்களை போராளிகளை சித்திரை வதை செய்தே கொல்கின்ற, கிராமங்களுக்கு தீ மூட்டி மக்களை அகதிகளாக்கி உடைமைகளை கொள்ளையடிக்கும் இந்திய ஆக்கிரமிப்பாளனிற்கு துணைபுரிந்து நண்பனாக இருக்கும் E.P.R.L.F மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்கி அமைதியை ஏற்படுத்தி தேசத்தை புனர் அமைப்பு செய்யப் போகிறோம் என்று கூறுகின்றனர்.

ஆக்கிரமிப்பாளனின் சட்டைப்பைகளுக்குள் பாதுகாப்பாக இருந்து கொண்டு வயோதிபர், பெண்கள் சிறுவர் என்ற வேறுபாடு இன்றி காட்டுமிராண்டித்தனமாக சித்திரவதை செய்தும், கொலைகளை செய்கின்ற E.P.R.L.F இனர் தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தை அமைதியை ஏற்படுத்தப் போகிறார்கள்.

இவை மட்டுமா? வெளிவந்துள்ள செய்திகளின்படி விடுதலைப் போராட்டத்தை திசைமாற்றி இட்டுச் செல்வதற்கு எதிராகவும் இதன் காரணமாக உள்ளமைப்பில் ஏவி விடப்பட்ட அராஜகத்துக்கு எதிராகவும் போராடி E.P.R.L.F

இல் இருந்து விலகியவர்களுக்கு இன்று மரண தண்டனை விதித்து அவர்களை தேடி கொலை கரங்களுடன் அலையும் E.P.R.L.F இனர் ஜனநாயகத்தை பாது காக்கப் போகிறார்கள். அவர்கள் தான் சொல்கிறார்கள். நீங்கள் நம்புகிறீர்களா?.

—x—x—x—

44ம் பக்க தொடர்ச்சி..

நினைக்கிறேன்" ரஞ்சித் கூறிய போது சற்று ரமணிக்கு நெருடியது. இப்போது தப்பித்துவிட்டோம், மறுபடியும் சிறீ லங்கா படை அதிகாரிகள் அவர்களின் விசாரணை இவற்றை சந்தித்தாக வேண்டும். அது எப்படி எப்படியெல்லாம் இருக்குமோ ?.... ஆனால் சமாளித்துக் கொள்ளலாம், என்று ரமணி நினைத்துக் கொண்டான். அவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அது அவன் நினைத்ததைப் போல் இல்லை என மறுநாள் தான் புரிந்து கொண்டான்.

(தொடரும்).

உங்கள் குழந்தையின்
பிறந்ததின வாழ்த்தை
பார்வையில் பிரசுரித்து மகிழுங்கள்.

## HOW WE LIE TO OURSELVES

The need for love and approval in every human being so great, that we deceive ourselves, into believing that we deserve them. We always try to protect ourselves and we really don't even know that we are doing it. Our unconscious mind stands like guardian angel protecting the image of ourselves. Protection of ourself image forces us to behave in ways that are bound to damage our relations with people. We make excuses and try to get out of situations saying "I did it because ------". We think we have provided good and substantial reasons for our behaviour. But others see through this maneuver easily. We disown the fault and say it's the other man's doing, and as you know no one likes this sort of behaviour, we always try to take it out on a subordinate to avoid looking at ourselves. The "Unreasonable Tyrannical Boss" is one of the most unloved people in the world.

These defenses help us deceive ourselves and retain the image of ourselves as important and productive people. Unfortunately, these defenses also bar the way to accurate and creative self understanding and to establishing productive relationships with others.

So let's beware and not lie to our ownselves, cheating ourselves serves no purpose.

SAM SODIRAJ

# மனிதனின் சுதந்திரத்தை

வெள்ளி பனி கொட்டி வேகமாய் குவிந்திடும் வேளை இங்கு
அள்ளி பிடித்து ஒரு கடி கடித்து தின்றிடலாம் என்றால்
பள்ளி பருவ வயதில்லை பால் வடியும் முகமில்லை
துள்ளி திரிந்திடவும் இனிவான தேகமில்லை.

கிள்ளி கிள்ளை மொழி பேசி கொள்ளை பிம்பம் கண்டிடவும்
பள்ளி அறை சென்றால் பயங்கர குளிர் பிடித்திருக்கும்
தள்ளி விட்டால் தரை மீது விழ மாட்டோம் தனி பனிமலை
-மீது தான் வீழ்வோம்

முள்ளி குத்தினாற் போல் முழு உடம்பும் பனி மூடிக் குவிந்துவிடும்

சொல்ல முடியாது ஜில் என்று சிலிர்த்து சிவப்பாகிக் கன்னம்
மில்லி கணக்கில் மிதமாக மதுவில்லை மண்டையும் போயிருக்கும்
மல்லி வா மச்சான் மாரும் வா மனமாரக் குடிப்போம் கடி
-என்று
மெல்லி சாய் மூடிதனை முறுக்கித் திறந்து மூலை அறையொன்றில்

சிம்பு

# நினைவுறுத்தும்

ஆரம்பித்திடுவோம் அசல் "பார்ட்டி" அதில் சிறு அமர்கழம்

அரசியல் புதினங்கள் அடிக்கடி பேசி அநியாயம் அவர்களென்றும்

அரை குறை ஆங்கில வார்த்தைகளும் இடையிடையே செப்பி
-அட. மடயா என்று அன்போடு பேசி

அருமையே அருமையென்று அதில் நியாயம் கூறி

மல்லாந்து படுத்திடுவோம் மதிற் சுவரில் தலைமுட்டும்

மற்றுளின் மடியில் காலிருக்கும் மதிப்பும் மிகுந்திருக்கும்

மதியிழந்தும் சளயிருக் கும் சாம்பர் கொட்டி சிகரெட்டாஷ்
-சேர்ந்திருக்கும்

மிச்சமதில் கண்ணிருக்கும் முடிப்பதற்கும் ஆளிருக்கும்

மைனர்ஸ் குளிர்வும் மனம் நிறைந்த மணிவிருந்து

மணியோ மயுநானாய் முற். காலை ஒன்றிருக்கும் பசியும்
-போயிருக்கும்

மாடியின் கீழ் வசிக்கும் மனிதரின் தடியடிக்கும் சத்தம்

மானமுடன் வாழும் மனிதரின் சுதந்திரத்தை நினைவுறுத்தும்.

# தொடரும் நிகழ்வுகள்

தமிழ் கலாச்சாரம், தமிழ் பண்பாடு, தமிழ் பாரம்பரியம் என்பது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பேணப்பட்டு வருகின்ற ஒன்றாகும். அகம்– புறம் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்து அதில் இல்லற வாழ்க்கையையும் அதன் விசேடங்களையும் மிகத்திறம் பட எடுத்துக் கூறுவது தமிழ் கலாச்சாரம் தான் என்றால் மிகை ஒன்று மில்லை. அகத்தியல் அகநானூறு, இல்லறவியல், இப்படி சங்ககாலத்திற்கு முன்பிருந்தே குடும்ப வாழ்க்கை பற்றியும் அன்பு பாசம், ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொண்டு நடக்கும் தன்மை போன்றவை பற்றியும் போதிக்கப்பட்டு வருகின்றது.

மேற்கூறியவற்றை எழுதுவது எம்மவர்களில் சிலர் இவற்றை எல்லாம் தெரிந்து கொள்ளாமல்த்தான் கனடா மற்றும் பிறநாடுகளுக்கு வந்திருக்கின்றார்கள். என்பதற்கில்லை , தெரிந்தும் உதாசீனத்தில் செயற்படுகின்றார்கள் என்பதற்காகத்தான்.

குடும்ப வாழ்க்கை என்பது அன்பெனும் அத்திவாரத்தில் புரிந்துணர்வு எனும் கற்களால் கட்டப்படும் அழகிய கோபுரமே தவிர, பணத்தாலும் வெறும் இச்சைகளாலும் நிரப்பப்படும் குப்பை மேடு அல்ல"

குமரன் மூர்த்தி

வேறுபட்ட 1). , மனநிலை 2) பழக்கம் (3) உணவு முறை (4) கல்வி (5) பொழுதுபோக்கு (6) ரசனை (7) சிநேகிதம் அல்லது உறவு (8) மாறுபட்ட உடலமைப்பும் தன்மையும் (9) சிறுவயதில் சூழல் மாற்றங்களில் வளர்ந்திருத்தல் (10) பெற்றோர் அல்லது அவர்களில் பெற்றோர் மாறு பட்ட பின்னணி (11) நிரந்தர அல்லது பரம்பரை நோய்கள் அல்லது உடல் உபாதைகள்.

இப்படி முற்றிலும் வேறுபட்ட அல்லது பலவற்றில் வேறுபட்ட இரண்டு மனித உருவங்கள் இணைந்து குடும்பம் நடத்துவதென்பது சாதாரணவிடயமல்ல. (1) ஒத்துப்போதல் 2. முரண்படுதல் 3. மௌனமாயிருத்தல். 4. விட்டுக் கொடுத்தல். போன்ற நிகழ்வுகள் அன்றாடம் ஒவ்வொரு குடும்பத்திலும் நடந்து கொண்டிருக்கின்றது. அதிலும் மேற்கத்திய குடும்ப அமைப்பைவிட எமது தமிழ்க் குடும்ப அமைப்பு பலவற்றிலும் வேறுபட்ட ஒன்று. இறுக்கமானதும் ஆண் ஆதிக்கம் நிறைந்ததாகவும் உள்ள இக் குடும்ப அமைப்பு தாயகத்தைப் பொறுத்தவரையில் எப்படியோ இருந் தாலும் மேற்கு நாடுகளில் வாழும் தமிழர் களுக்கு பல சிக்கல்கள் உருவாகத்தான் செய்கின்றது.

1. மேற்கத்திய அமைப்பின் நேரடிப்பாதிப்பு
2. அதிக பணத்தை உழைக்க வேண்டும். என்ற அவாவில் மனைவி பிள்ளைகள் என்ற சிந்தனை குறைந்து சதா பணத்தைப் பற்றியே சிந்திப்பது.
3. எல்லா நிலையிலும் முரண்பட்டு நிற்றல்.

4. பாலியல் ரீதியான வெளிப்பாடுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தின் அளவு.

அன்றாடம் குடும்பத்தில் ஏற்படும் பிணக்குகளை அனுதாபத்துடனும், கரிசனையுடனும், அணுக வேண்டியது இருவருக்கும் கட்டாய கடமையாகும்.

இக் குறைகள் முடிந்த அளவில் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படல் வேண்டும். பிறநாடுகளில் வந்து தாம்பத்தியம் நடத்துகின்றவர்களில் 95% விழுக்காட்டுக்கு மேல் வயதில் இளையவர்களாகவும், அனுபவம் போதாதவர்களாகவும் காணப்படுகின்றனர். இதே நிலையில்தான் தாம்பத்தியவாழ்க்கையைத் தாயகத்தில் தொடங்குகின்றனர். ஆனால் அங்கே பிரச்சனைகளை நேராகவும், புத்திமதிகளைச் சொல்லவும் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் மனக்குறைகளைச் சொல்லி ஆறுதல் தேடவும் பெற்றோர்களும் உறவினர்களும் பேரன் பேத்தி வயதில் மூத்தோர்களும் பேருதவி புரிகின்றனர். ஆனால் இங்கே இந்த நிலை இல்லாததால் பல குடும்பங்களுக்குள் ஏற்பட்ட சிறுசிறு பிரச்சனைகள் கூட பெரிதுபடுத்து அல்லது பெரிதாகி அடிதடி, பிரிந்திருத்தல், விவாகரத்து என்னும் நிலைக்கு வளருகின்றது. மொன்றியல் நகரிலுள்ள பிரபல வக்கீலிடம் 90க்கு மேற்பட்ட தமிழ்த்தம்பதிகள் விவாகரத்து வழக்குகள் இருப்பதாக அறியப்படுகின்றது. ஆங்காங்கே பலர் விவாகரத்து பெற்று பிரிந்திருக்கின்றார்கள். அண்மையில் ஒரு பெண் சுட்டுக் கொலை செய்யப்பட்டதும், தற்கொலை நிகழ்ச்சிகளும் நடப்பது பிரச்சனையின் தாற்பரியத்தை முழுதாக உணர்ந்து அதற்கு பரிகாரம் தேடாமைதான். குறிப்பாக கனடா நாட்டில் ஆண் பெண்

# PEALI

PEALI a non profit academy of dance
Celebrates NATARAJA AND ANNIVERSARY DAY

* Science of Abhinaya by
  Nrithyarani Kalpalatha Filteau

* BharathaNatyam Dances by
  'Peali' students and Janani Swami
  (Guest Artiste from OTTAWA)

* General directions by
  Sarasi Raj and Kalpalatha

Saturday May 27,1989 6-30 PM.

Beacons High Auditorium
84,Beaconsfield Court,
Beaconfield, Que.

* Donations $5 (Family)
  $3 (Single)



தரமான பொருட்களை வாங்குவதற்கு இன்றே நாடுங்கள்



# VAN HORNE BAGEL

**5497 VICTORIA AVENUE**

**(Corner Côte St. Catherine)**

**MONTRÉAL, QUÉBEC H3W 2P9**

எம்மிடம் இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**SPECIAL**

புழுங்கலரிசி 6.99

பச்சை அரிசி 6.49

12 பயறு (இந்தியா) 9.50

Open Seven Days a Week

6:00 AM – 11:00 PM

***FREE DELIVERY***

***LIVRAISON GRATUITE***

**TÉL.: (514) 340-1312**

இருவரும் வேலைக்கு செல்கின்றனர். பலவித நெருக்கடிகள்.

1. வேலைப்பளு 2. சம்பளப்பற்றுக் குறை என்ற மன அரிப்பு. 3. வேலை கொள்வோரின் நச்சரிப்பு அல்லது ஆண்டுதல். இப்படி இன்னும் பல சொல்லொணு உபாதைகளுக்கிடையில் வேலைத்தளத்தில் பொழுதைக் கழித்து விட்டு வரும் இருவரும் வீட்டில் இருக்கும் வேலைகளையும் செய்ய வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். அதிலும் குழந்தைகள் உண்டெனில் வீட்டு வேலை இரட்டிப்பாகும். இந்த நிலையில் வீட்டு வேலைகளை மனைவியுடன் இணைந்து முடிந்துவிட்டு ஓய்வெடுக்கும் கணவன்மார் நிறைய உண்டு. இவர்கள் மத்தியில் பிரச்சனைகள் தோன்றுவது மிகக் குறைவு. மனைவிதான் வீட்டு வேலைகளைச் செய்ய கடப்பாடுடையவள் என்ற மனோபாவமுள்ள கணவன்மார்களும் பலர் உள்ளனர். இது தவிர குடித்துவிட்டோ அல்லது குடிக்காமலோ மனைவியை அடித்துத் துன்புறுத்துவது. வீணை சந்தேகங்களை எழுப்புவது. யாருடனாவது தொடர்பு படுத்திப் பேசுவது அல்லது தங்களின் தவறுகளை மூடிமறைக்க அல்லது நியாயப்படுத்த மனைவிமாரைப் பழி சுமத்துவது இதே மாதிரி பெண்களும் அன்களை நிந்திப்பதும் வீண் கற்பனைகளை மனதில் வளர்த்துக் கொண்டு தங்களின் சக்திக்கு மேல் ஆடம்பர வாழ்க்கை வாழ முற்படுவதும் அளவுக்கு மீறிக் கடன் படுவதும் மேலைத் தேசத்துக் கலாச்சாரம் போல் தாங்களும் தங்கள் பிள்ளைகளும் மாற வேண்டும் என்ற துடிப்பில் அசிங்கமாகச் செயற்படுவதும் கொண்டாட்டங்கள், வைபவங்கள் போன்றவற்றை மிகப்பெரிய அளவில் நடத்தவேண்டும் என போட்டி மனப்பான்மையுடன் செயற்படுவது இப்படியான பழக்கங்கள் உள்ள தம்பதிகளிடையே அடிக்கடி

பிரச்சனைகள் தோன்றுவது சகஜமாகி விட்டது. இது தவிர இலக்கியத்துறை பொதுத்துறை போன்றவற்றில் ஈடுபடுபவர்களின் மனைவிமார் (பெண்கள் இத்துறையில் ஈடுபடுவது மிகக்குறைவு) கொடுக்கும் நச்சரிப்புக்கள். "பாருங்கோ உங்களோட வந்த அவன் வீடுவாங்கிவிட்டான். நீங்கள் என்னத்தைக் கண்டீர்கள். என்ற வசைபாடல், கவிஞர் பிரசாத் எழுதியதுபோல் "கட்டுரையும் கதைகளும் கண்டறியாக் கவிதைகளும் என்னமயிருக்காய் இங்கு வந்த நீ. உன்னோடு வந்த உதயனோ ஆயிரத்தை எழுபதுக்கு தூக்கி எறிகிறான்..."

இலக்கியம் பொதுத்துறை என்பது உள்ளார்ந்த ஆத்மதிருப்திக்காக செய்யப்படும் ஒன்று அதில் ஈடுபாடு உள்ள ஒரு மனிதனை முடக்குவது அவனை நடைப்பிணமாக ஆக்குவதற்கு சமன். இதை சில பெண்கள் உணரத்தவறுவதால் பெரிய பிரச்சனைகள் என்று தோன்றுவிட்டாலும் சிறுசிறு பிரச்சனைகள் தோன்ற வாய்ப்புகள் உண்டு. உழைக்க வேண்டிய நேரத்தில்தான் உழைக்க வேண்டும். என்பதும் பெரும் பாலும் உழைப்பதற்காகத்தான் இங்கு வந்தோம்

என்பதும் நூற்றுக்கு நூறு உண்மை. ஆனால் மனித ஆத்மதிருப் தியைப் புறக்கணித்து விட்டு இவற்றிற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்தால் சிலகாலத்தின் பின் வாழ்க்கையில் பிடிப்பற்ற நிலை தோன்றலாம். அல்லது பிரச்சனைகளுக்கு நடுவே உழலும் ஒரு வாழ்க்கையைத்தான் வாழ்ந்து கொண்டிருக்க முடியும்.

ஒரு குடும்ப வாழ்க்கையின் ஐம்பது சத வீதமான மகிழ்ச்சியை நிர்ணயிப்பது தாம்பத்திய உறவுதான். இது மேலைத் தேச நாடுகளில் பாடசாலைகளில் பாடமாகப் புகட்டப் படும் விடயம் என்றால் இதன் முக்கியத்துவம் சகலருக்கும் விளங்க

வேண்டிய ஒன்று. இந்த அடிப்படையில் பிரச்சனைகளின் தோன்றுவது இது பற்றிய அறிவு போதாமையே அல்லது இந்த விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமை. இந்த துறையில்ப் பிரச்சனை உள்ள தம்பதியினர் இத்துறை மருத்துவ நிபுணர்களிடம் கலந்தாலோசித்தல் நன்று.

ஆக குடும்பத்தில் கணவன் மனைவிகளுக்கிடையே ஏற்படும் ஒவ்வொரு சிறுசிறு பிரச்சனைகளையும் வளரவிடாமல் உடனுக்குடன் அதன் தார்ப்பரியத்தை உணர்ந்து அதற்கேற்றவகையில் நிவர்த்தி செய்வோமாயின் வாழ்க்கை பூராகவும் சந்தோசமாகவும் ஒற்றுமையுடனும் வாழலாம்.

பெற்றோர்கள் மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் இருந்தால்தான் பிள்ளைகள் ஆரோக்கியமானவர்களாகவும், கல்வியிற் சிறந்தவர்களாகவும் புத்திசாலிகளாகவும் வளருவார்கள். ஓரளவுக்கு மேல்படித்தவர்களும் பண்புள்ளவர்களும்தான் பிறநாடுகளுக்கு வந்தவர்கள். எனவே தங்கள் அறிவுகளை நல்ல நிலையில் பயன்படுத்தி நல்ல நிலையில் வாழவேண்டியது இவர்களின் கடமையாகும். சிறு, சிறு பிரச்சனைகளுக்கெல்லாம் குடும்பத்தை முச்சந்தியில் போட்டுடைத்து சந்தி சிரிக்க வைப்பது விவாகரத்து என்று வக்கீலைத் தேடி ஓடுவது பொலிசுக்கு சென்று பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வது. இந்த நிலை தொடருவது எமது தமிழ்ச் சமுதாயத்திற்கு நல்லதல்ல. இங்கு நாங்கள் உதிரிகளாக வாழ்ந்தாலும் எங்களுக்கு ஒரு கலாச்சாரம் பண்பாடு, பாரம்பரியம் உள்ள சமுதாயம் என்பதை மறந்து விடக்கூடாது. இதைக் கட்டிக் காக்கும் பொறுப்பு ஒவ்வொரு தமிழ் ஆணுக்கும், பெண்ணுக்கும் உண்டென்பதையும் மறந்து விடக்கூடாது.

# புகைக் கவிதை

[illegible]
இருபது வருடங்கள்
[illegible]

[illegible]

# [illegible]

...ங்கள் எனக்குள்ளே மருக்குவனைப்
மௌனம் [illegible] திருத்தும் இதழ்
நினைவுகளை முருக்குவனை
நீப்பட்ட பட்சிகளும் அனைத்துப்படி
நினைவுச் சுகங்களும்
காலமும் கழிந்தது.
கண்ணீரும் துயரவனை
தனைனது அடிப்பதிப் [illegible]
வண்ணமுமப் புக்கசுது
வாழ்க்கைப் பயணத்தில்
என்றுமே தன்னை
இணைப்பதற்கு யாருமில்லை.

இன்னும் எனக்கோர்
இளமை இருக்கிறதாய்
நண்பர்கள் சொல்ல
நம்பிக்கைச் சிகரங்களைச்
சன்னல்களுக்குள் வந்து
கனவு விரிகிறது.
சதையும் இரத்தமும்
சத்தியமாய் எனக்குண்டு!
இதமான அழகுணர்ச்சி
இதயத்தின் ஆழத்தில்
இப்போதும் உண்டு!!
இனிமை இனிமையைத்தான்
எப்போதும் தேடுகின்ற
ஏக்கங்கள் எனக்குண்டு!!!
சின்ன அறைக் குள்ளிருந்து
சிறகு விரித்துப் பறக்க
இன்னும் எத்தனை
இளமைகளைக் கொல்வேனோ?
இந்த வசந்தத்தில்
இனிதாக மலருகின்ற
எந்தவொரு பூவும்
எனக்காகப் பூக்கவில்லை.
எந்த மரமும்
எனக்காகத் துளிர்க்கவில்லை
நானொரு மரமாகி
நட்ட நடுவெளியில்
வானுயர ஓங்கி
வளர்ந்த மரமாகி........

## ஈழத்திலிருந்து பார்வைக்கு...

யாழ்ப்பாணம்
10.03.89.

பார்வை ஆசிரியர்களுக்கு

அன்புடையீர்,

தங்கள் பார்வை இதழ்கள் சில அவ்வப்போது எனது கைக்கு நண்பர் குகமூர்த்தி மூலமாக கிடைத்தன. அவைகளைப் பார்த்த போதெல்லாம், பத்திரிகையின் ஆசிரியர்களது முயர்ச்சியும், ஆர்வமும் பெரும் மகிழ்ச்சியை ஊட்டுவதை நான் நண்பருக்கு தெரிவித்துள்ளேன். கடைசியாக ஜனவரி 1989 இதழ் கிடைத்த போது, எனது மகிழ்ச்சியை தங்களுக்கு நேரில் தெரிவிப்பது அவசியம் என்று தோன்றியது. பத்திரிகையை நேர்த்தியாக கொண்டுவருவதில் தங்களுக்கிருக்கும் அக்கறையை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

நமது தேசத்தின் விடுதலைப் போராட்டம் இன்று அடைந்துள்ள நெருக்கடி நிலை, விசயங்களை மீளாய்வுக்குட்படுத்தும் அவசியத்தைப் பலர் மத்தியிலும் தவிர்க்க முடியாமல் ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரசின்பாசிச இனவெறி ஒடுக்கு முறைக்கும், இந்திய அரசின் மேலாதிக்க வெறிக்கும் மத்தியில் சிக்கியுள்ள எமது போராட்டம் சமரசவாதிகள், துரோகிகள், எதிர்புரட்சியாளர்கள் மற்றும் வரலாற்றுக் குருடர்கள் மத்தியில் இருந்து விடுபட முடியாமல் தவிக்கிறது. காசி நஸ்ருல் இஸ்லாம் என்ற கவிஞனின் வார்த்தையில் சொன்னால், நாதியற்ற தேசம் நீந்தத் தெரியாததால் மூழ்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அவனே சொல்வது போல் 'எனினும் படகு சென்றாக வேண்டும்!

நிதர்சனம் என்ற தலைப்பில் குமார்மூர்த்தி என்பவர் எழுதியுள்ள கருத்துக்கள் முக்கியமானவை. ஆனால், அவற்றுக்கு சில மேலதிகமான ஒழுங்கு படுத்தல்கள் அவசியம் என்று நினைக்கிறேன்.

அவர் சொல்கிற எனக்கு உடன்பாடான கருத்துக்களை இப்படி வகைப்படுத்தலாம்.

1. தற்போது கிடைத்திருக்கும் (மாகாணசபை) தீர்வில் ஈழத் தமிழினத்தின் குறைந்த பட்சக் கோரிக்கைகள் கூட நிறைவேற்றப்படவில்லை. (உ+ம் வரதராஜ பெருமாள் 'யூனியர் போஸ்ட்' பேட்டி)

2. (இந்தியா மீது) அதீத நம்பிக்கை வைத்து ஏமாந்து போனது இந்தியாவின் தவறல்ல, ஈழத்தமிழர்கள் விட்ட தவறு.

3. எந்த அரசு வந்தாலும் இந்தியாவின் பிராந்திய நலனும் பாதுகாப்புக் கொள்கையும் மாறப்போவதில்லை.

4. இந்திய ராணுவம் விரைவில் வெளியேறி விடும் என்பது பாமரத்தனம். இந்தியாவின் நலன்களை பாதுகாக்கவே அது

இலங்கையில் நிலைகொண்டுள்ளது என்பதுதான் உண்மை.

ஆனால், இந்த முக்கியமான உண்மைகளை சுட்டிக்காக்கும் கட்டுரை ஆசிரியர் திட்டவட்டமாக என்ன செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை தெரிவிக்கவில்லை. அவர் கட்டுரை இவ்வாறு முடிகிறது. ஆக மற்ற இயக்கங்கள், விட்டுக் கொடுத்து பின் முன்னேறல், நிகழ்கால அரசியல் ராஜ தந்திர ரீதியில் வந்துச் செயல்படல் போன்றவற்றின் மூலமாகத்தான் இலட்சியங்களை நிறைவேற்ற முடியுமே தவிர வீண் பிடிவாதங்களால் அல்ல, என்பதை சகல தரப்பினரும் உணர்ந்து செயல்பட வேண்டிய காலகட்டம் இது. செயல்படுவார்கள் என நம்பிக்கை கொள்வோம்.

இத்தகைய தெளிவற்ற ஒரு முடிவை அவர் முன் வைத்திருப்பது, பொதுப்படையாக அல்லாமல், நடைமுறைக்காக, அத்தோடு தொடர்பு படுத்தி சிந்திப்பவர்களுக்கு ஏமாற்றத்தையே தரும். சரியோ தவறோ விசயங்களை உடைத்து முன் வைத்தால் தான் விவாதிக்கவாவது முடியும்.

இங்கு கருத்துக்கள் தெளிவில்லாமல் வந்ததற்கு காரணம், கட்டுரை ஆசிரியருக்கு இந்தியா தொடர்பான குழப்பம் நிலவுவதே. அவரே சொல்கிறார்.

இந்திய அரசைப் பகைப்பதை விடுத்து ராஜதந்திர ரீதியில் நண்பர்களாக செயற்படாமல் தமிழீழம் என்ற கனவை நனவாக்குவது இலகுவானதாக இருக்கும். நேரடியாக கூறுவதானால் இந்தியாவின் பிராந்திய நலன் தான் தமிழீழத்தின் வெளியுறவு கொள்கையின் பிரதான அம்சம் என செயல்பட வேண்டுமென இந்தியா விரும்புகிறது.

தொடர்ச்சி ௨ம் பக்கம்

# ஸ்ரீ சிவா ஜுவலரி

இலங்கையை நினைவூட்டும்
வண்ணம் யாழ்ப்பாணத்தில்
கைதேர்ந்த நகை செய்யும்
வல்லுவர்களால்
தயாரிக்கப்படும் நகைகளுக்கு
ரொரன்ரோவில் முதலிடம்
விரும்பிய டிசைன்கள்
நங்கையர் விரும்பும்
நவநாகரிக விதம் விதமாய
ஆபரணங்கள்
அனைத்திற்கும் சிறந்த ஒரே
இடம்.

**வியாபார நேரம்**

| | |
|---|---|
| செவ்வாய் - வெள்ளி | 12.30-7.30 |
| சனி - ஞாயிறு | 10.00 - 8.00 |
| திங்கள் | CLOSED |

**SRI SIVA**
*Jewellery*

**721 Bloor St. W., Suite #2c,**

**Toronto, Ont.**

**(416) 531-4867**

ஆபரணங்கள் அழகுக்கும்

உங்கள் முதலீட்டுக்கும்

- guaranteed 22 karat gold, bangles, thalli-kodi, rings, chains, wedding and engagement jewellery, diamond rings, and other ornaments of strictly the best quality
- unbeatable lowest prices
- custom-made jewellery
- minor repairs and adjustments

Subway: Christie

# கணேஷா

# GANESHA

அன்று முதல் இன்று வரை
மலிவு விற்பனையில் மக்களைத்
திருப்திபடுத்திவரும் ஒரே ஸ்தாபனம்

## கணேஷா

2kg மைசூர்ப்பருப்பு 2.99
2kg சுண்டல்கடலை 2.99
மதராஸ் பப்படம் .99
2 Lb ரவை .99
[illegible] 1.79

7244 ST. HUBERT
MONTRÉAL, QUÉ. H2R 2N1

சகலவிதமான இலங்கை,
இந்திய, கனேடிய
உணவுப்பொருட்களை
பெற்றுக்கொள்ளலாம்.

273-7502 ☎ 273-3589

இந்தி தமிழ் வீடியோப்படங்களும்
கிடைக்கும்.

**• கவிதை**

# தாய்க்கொரு கடிதம்

அம்மா.....!
அன்புத்தாயே...!
என் கடிதத் தொடர்...
களைத்த இதயம் இளைப்பதற்கில்லை...!

இந்த நூற்றாண்டின் முடிவுரை
எழுதும் கைகளோ....
என் மண் எடுத்திருக்கிறது...!
தாயே...!
இது என் தேசத்து....
வரைபடம்....!

தேர்தல் நாடகக் குழு....
என் தேசப் பெயரை....
பிரகடனம் செய்தது...
பண்ணாகத்தில்...
பத்திரிகையோடு சரி
கொட்டகை பிடுங்கியாயிற்று...!
ஆயின்....
'தமிழ் ஈழம்' என்பது....
தாரகமானது... என
மண்ணின் மைந்தர்கள்
பிறந்தனர் அம்மா...!

ஆம்......
என் நேசச் சோலை....
தென்றலை மறந்தது...
வசந்தக் கிளிகள்.....
வாலிபம் மறந்தன....
ஒவ்வொரு வீடும்...
புறநானூற்றுப்...
புத்தகம் ஆகின....

தாயே....
இளைய வயதில் - நீ
சொல்லிய கீதை....
வீரத்தாய் ஒருத்தி....
வெங்களத்தில் ஆடவனை
சீராய் மடியில் இருத்தாத
பாலகனை....
ஆரத்தழுவி.... அனுப்பி வைத்தாள்...!
இன்றோ....
ஆயுதப் போரில்...
ஆசைமகன் இறந்துவர...
பாசத்தாய் மகிழ்ந்த... வை
தேசத் தெருக்கள் ஏராளம்...!

ஆம் தாயே....!
விரல்கள் இரண்டில்...
வெற்றியைச் சொல்லும்...
பாலஸ்தீனியக் குழந்தையை

உலகம் பார்க்கிறது....
உதிரமும்.. உயிரும்....
அவியாய்ச் சொரியும்...
என் மண்ணின் யாகம்...
இந்த அகிலம் வியக்கிறது...!

ஓ... தாயே....
அந்த! ஜீவன்களைப் பார்!
உன் பிள்ளைகளைப் பார்!
அவர்களை....

ஒன்று சேரக் கட்டி அணைக்கும்..
அந்தப் பாக்கியம்....
நிட்சயம் கிடைக்கும்....
அது...
காலம் எழுதும் சரித்திரம்..!

இப்படிக்கு...
அன்பு மகன்

தமிழ் பிரியா

தொடரும்....

# மூன்றாம் உலக நாடுகளும் வன்முறையும்

— டொம் கெல்டர் கமரு

— தமிழில்: அமரர் விமலதாசன்

(சமூகப் பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியாக ஆராயும் கிறிஸ்தவர்களில் ஒரு பகுதியினர் சமுதாயத்திற் காணப்படும் அபிவிருத்தியின்மைக்கும் அடக்குமுறைக்கும் வன்முறையான புரட்சியே தீர்வெனும் முடிவிற்கு வருகின்றனர். வன்முறைதான் ஒரே தீர்வென்றோ அல்லது அதுதான் தர்க்க ரீதியானதென்றோ ஏற்றுக்கொள்ளாத பலர் இருக்கின்றார்கள். தீர்வு காணலின் துரிதத்தையும், சீர்திருத்தங்களினால் எதையும் எதிர்பார்க்க முடியாதென இவ்வகிம்சைவாதிகள் உணர்ந்தபோதும் அடக்குமுறையாளர் பாவிக்கும் முறையையே இவர்களும் பாவிக்க விரும்புவதில்லை. இத்தகைய கிறிஸ்தவர்களின் நிலைப்பாட்டை பிரேசில்நாட்டு அதிமேற்றிராணியார் டொம் கெல்டர் கமரு தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

ஆனால் வன்முறைக்குரிய அடிப்படைக் காரணங்களை அறிதல் மிக அவசியமானது. அமைப்பு ரீதியான மாற்றத்தை உலகு நாடிநிற்கிறது. குறைவிருத்தி நாடுகளை அவதானிக்கும்போது இவ்வுண்மை தெள்ளெனப் புலப்படும். பொருளாதார, அரசியல், விஞ்ஞான, சமூக, சமயப் பார்வையில் அபிவிருத்தியடையாத நாடுகளைப் பார்க்கும்போது மேலெழுந்தவாரியான மாற்றங்கள் பிரச்சினைகளைத் தீர்க்காது அமைப்பு ரீதியானபுரட்சியே தேவைப்படும்.

காலம்சென்ற பாப்பரசர் ஆறும் சின்னப்பர் இன்றைய சமூக அமைப்பு முறைகளிலுள்ள அநீதிகளை எதிர்த்துப் போராடி வெல்ல வேண்டும் எனக் கூறியுள்ளார். அபிவிருத்திக்கு அடிப்படை மாற்றங்கள் அவசரம் தேவை எனக் கூறியுள்ளார். இதற்கு ஒவ்வொருவரும் தமது பங்களிப்பை ஆற்ற வேண்டும்.

அபிவிருத்தியடையாத நாடுகளில் உள்ள அகக்காலனித்துவம் அவ்வவ் நாட்டு மக்களிற்கு எதிராகச் செயற்படுவதை நாம் அறிவோம்.

வன்முறையற்ற தமது ஈடுபாட்டினை இவர் தெளிவாக எடுத்துக் கூறியபோதும் இவரை ஒரு கம்யூனிசவாதி எனவும், திருச்சபையை உள்ளிருந்து அழிக்க முற்படுகின்றார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். தனக் கியல்பான தாழ்மையுடன் டொம் கெல்டா இவற்றிற்கு பின்வருமாறு பதிலளிப்பார். "லட்சக்கணக்கான எனது சகோதரர் பட்டினியால இறக்கவும், குழந்தைகள் போஷாக்கின்மையால் இறக்கவும், மக்கள் வசதியற்ற நிலையில் வாழவும் காரணமாயுள்ள நிலையை மாற்றும்படி கோருவது கம்யூனிசம் என்றால் அல்லது புரட்சி என்றால் நான் கம்யூனிசவாதிதான் நான் புரட்சிவாதிதான்"

(பாரிஸ் மாநகரில் 1968-ம் ஆண்டு சித்திரை 25-ம் திகதி நிகழ்த்திய உரை)...

எல்லாக் காலங்களிலும் வன்முறை இருந்துள்ளது என்பது உண்மைதான். இப்பொழுதுமுன்னெப்பொழுதையும் விட வன்முறை அதிகரித்து வருகின்றது. பல வடிவங்களில் இன்று எங்கும் வன்முறை காணப்படுகின்றது. வன்முறையைக் கண்டிப்பது சுலபமானது.

கோடிக்கணக்காக மக்கள் வறுமையில் வாட ஒருசிலர் சுகபோகத்தில் திளைத்திருப்பது எங்ஙனம் நீதியாகும். சில நாடுகளில் ஏழைத் தொழிலாளர் விவசாயம் செய்ய ஒரு துண்டு நிலமும் இல்லாதபோது பெரும் காணிச் சொந்தக்காரர் தம் நிலங்களைப் பயிர்செய்யாமலே வைத்திருப்பர்.

லத்தீன் அமெரிக்காவில் இத்தகைய நிலைமைகள் உள்ளபோது கிறிஸ்தவர்களின் கடமை என்ன? லத்தீன் அமெரிக்க கண்டத்திலுள்ள அநீதி, சுரண்டலுக்கு கிறிஸ்தவர்களும் பங்காளிகளாய் இருந்திருக்கிறார்கள். இந்தியர்களையும், ஆபிரிக்கர்களையும் அடிமைகளாக வைத்திருக்க நாம் சம்மதம் தெரிவித்தோம். பெரும் காணிச் சொந்தக்காரருக்கும் பணக்காரருக்கும் நாம் அவர்கள் செய்யும் அநீதிபற்றி அவர்கள் விளங்கக்கூடிய முறையில் எடுத்துக் கூறினோமா? அல்லது அவர்கள் செய்யும் பயங்கர அநீதிகளை மூடிமறைக்க ஆலயங்களுக்கு தானம் வழங்குதலை நாம் மகிழ்வாக ஏற்றுக்கொள்ளவில்லையா? கிறிஸ்தவம் நீதியையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்ட விரும்பும் சமயம்.

லத்தீன் அமெரிக்காவில் கிறிஸ்தவம் நிரந்தர மீட்பிற்காக பணிபுரிகின்றது. முழு மனித விடுதலைக்காக உழைக்கின்றது எனவே லத்தீன் அமெரிக்க சமூக வாழ்வில் பொருளாதார அரசியல் வாழ்வில் கிறிஸ்தவர்கள் பங்களிப்புச் செய்யவேண்டும். அரசியல், வசதிபடைத்தவர்கள் ஒரு சிலரின் உடைமையாக இருப்பது நல்லதல்ல. ஏனெனில் வசதி படைத்தவர்கள் அடிப்படை மாற்றங்களை விரும்பமாட்டார்கள். கல்வியின் உள்ளடக்கம் சமூக மாற்றத்திற்கு ஏற்றதாகவே அமையவேண்டும். அபிவிருத்தி அடைந்த நாடுகளும் அபிவிருத்தி அடையாத நாடுகளும் அமைப்பு ரீதியான புரட்சியை நாடிநிற்கின்றன.

இரண்டு வகையான அபிவிருத்தி மாதிரிகளை இப்பொழுது பார்ப்போம். முதலாளித்துவ அபிவிருத்தியின் மாதிரியாக அமெரிக்காவையும் சோசலிச அபிவிருத்திக்கு மாதிரியாக சோவியத் யூனியனையும் எடுத்துக் கொள்வோம். முதலாளித்துவ ஆட்சியின் உள் முரண்பாடுகளை தெளிவாக எடுத்துக் காட்டும் மாதிரியாக அமெரிக்கா இருக்கின்றது. அமெரிக்காவிற்குள்ளேயே அபிவிருத்தியடையாத ஒரு பிரிவினைக்காணமுடிகின்றது.

ஆனால் இன்று பாரிய மாற்றங்கள் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டு வருகின்றன. கொள்கையிலும், நடைமுறையிலும் கிறிஸ்துவத்தை கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். ஆனால் இதனை சோவியத் ரஷ்யா ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

அமெரிக்காவும் ரஷ்யாவும் தமக்கிடையே உள்ள வல்லரசு மோதல்களால் மூன்றும் உலக நாடுகளின் முன்னேற்றம் பற்றி அக்கறைப் படுவதாகத் தெரியவில்லை. 15 வீதமான மக்கள் உலகில் வசதியாக வாழ்வதற்காக 85 வீதமான மக்கள் சதா துயரத்தில் வாழ்வதா? இந்நிலையில் அமைப்பு ரீதியான புரட்சி தேவையில்லையென்று யார் வாதிட முடியும்?

அமைப்பு ரீதியான புரட்சியை வன்முறையாற்றான் ஏற்படுத்த முடியுமா? வன்முறையை எழுந்தமானமாகக் கண்டிப்பவர்கள் இன்று இயங்கும் அமைப்பு, வன் முறையிலேயே நிறுவப்பட்டுள்ளது என்பதை மறக்கலாகாது. வசதி படைத்த ஒரு சிறிய குழுவினர் பெரும்பான்மை மக்கள் மீது வன்முறையாகவே ஆட்சி புரிகின்றனர்.

ஏறக்குறைய 300 லட்சம் வட அமெரிக்கர் வசதிகுறைந்த நிலையில் வாழ்கின்றனர். வெள்ளையருக்கும், கறுப்பருக்குமிடையே பிரிவை உண்டாக்குவதில் வெற்றிகண்டுள்ளது. அமெரிக்கா; கம்யூனிசத்தை எதிர்ப்பது என்ற போர்வையில் வசதிபடைத்தோரின் நலன்களை அதிகரிக்கச் செய்திருக்கின்றது. தேவையில்லாத யுத்தங்களை அமெரிக்கா தொடுத்துள்ளது. அமெரிக்காவின் செல்வாக்குள்ள அமைப்பு இயந்திர அமைப்பாக உள்ளது. இதனால் பல அமெரிக்க இளைஞர்கள் தொழில் நுட்ப வளர்ச்சியை மனிதத்துவப்படுத்துவதில் மூழ்கி நின்று உழைக்கின்றனர்.

சோவியத் ரஷ்யா விஞ்ஞான, மனிதத்துவத்தால் வழிநடத்தப்படுவதாக உணர்கிறது. ஏனெனில் இது மாக்சிச சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது. நடைமுறையில் முதலாளித்துவத்தை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டு மனித உரிமை மீறலை நடத்துகின்றது. சோவியத் ரஷ்யாவும் சீனவும் வல்லரசுகளைப் போலவே நடந்து கொள்கின்றன. மாக்சிசம் ஒரு மதக் கொள்கையாக கருதப்படுகிறது. மாக்ஸ் கிறிஸ்தவத்தின் சாராம்சத்திலும் கிறிஸ்தவர்களின் நடைமுறை வாழ்க்கையால் மதத்தை மக்களின் அபினாக மாற்றியவர்களின் பெலவீனத்திலும் அன்று பாரிய வித்தியாசத்தை கண்டு பிடிக்கவில்லை.

மக்கள் தம் பொதுக்கல்வி கலாசார முன்னேற்றத்திற்காக ஒன்று கூடி உழைக்கும் போது, கூட்டுறவு இயக்கத்தில் தொழிற்சங்கத்தில் சேர்ந்து செயற்படும் போது மக்கள் தலைவர்களை பயங்கரவாதிகள் எனவும் கம்யூனிச வாதிகள் எனவும் முத்திரை குத்த ஆட்சியாளர் முனைகின்றனர்.

வருடாவருடம் மனித உரிமைகள் பற்றி பெரிதாகப் பேசும் அமெரிக்கா உலகின் ⅔ பகுதியில் இவ் உரிமைகள் அநுபவிக்க கூடிய முறையில் உள்ளனவா என உற்று நோக்கல் பொருத்தமானது. வன்முறை சோசலிச நாடுகளிற் காணப்படுவது போல் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் காணப்படுகின்றது. நீக்கிரோக்கள் அகிம்சையிலிருந்து வன்முறைக்கு மாறிக் கொண்டிருக்கிறார்கள். தமது உரிமையை நிலைநாட்ட அவர்கள் வன்முறையை தெரிவு செய்கிறார்கள். ஜேர்மன், இத்தாலி, ஸ்பெயின், போலந்து நாடுகளில் இளைஞர் புரட்சி செய்கின்றனர். கிப்பிகளின் தனித்துவ எதிர்ப்பையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

ஆயுதங்களை; பெருமளவில் உற்பத்தி செய்யும் போட்டி நடந்து கொண்டே இருக்கிறது. அரசியல், இராணுவ தற்பெருமைக்காக இவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சோசலிசத்தை பாதுகாப்பதற்காக என்று கூறிக்கொண்டு செக்கோசிலோவாக்கியா மீது சோவியத் ரஷ்யா நடந்துகொண்ட விதம் எத்துணை பிழையானது.

வேலையில்லாப் பிரச்சனை கைத்தொழில் நாடுகளில் பெருமளவில் காணப்படுகின்றது. உறுதியான அரசுகளை விட இன்று சர்வதேச அறங்காவற் குழுக்கள் வலிமையானவையாய் இருக்கின்றன. சில தனி நபர்களை ஒழிப்பதற்கு இந்த அறங்காவற் குழுக்கள் காலாய் உள்ளன. இத்தகைய குழுக்களே இன்று உலகை ஆளுகின்றன. அவை புரட்சிகளை புரட்டி அடிக்கின்றன; யுத்தங்களை உருவாக்குகின்றன.

அபிவிருத்தியடைந்த நாடுகள் தமக்குள்ளே வன்முறையைப் பிரயோகிக்கின்றன. அபிவிருத்தியடையாத நாடுகளும் அவ்வாறே. இதைவிட மூன்றாவது விதமான வன்முறையை அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடையாத நாடுகள் மீது பிரயோகிக்கின்றன. இவ்வாறு மூன்று வகையான வன்முறைகள் இருக்கும்போது மக்கள் ஏன் விடுதலையைத் தரும் வன்முறை, மீட்பை அடையும் வன்முறை பற்றி பேசிக் கொள்கிறார்கள் என நாம் உணர முடியும்.

ஆகியிருந்தால் என்ன, நீதிக்கும், அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும்போது வன்முறைக்கு வித்திடுகின்றார். நான் அமைதியை உருவாக்கவே பல இடமும் பிரயாணம் செய்கின்றேன். சொல்வதை விட கொலை செய்யப்படுவதை நான் விரும்புவேன். நற்செய்திக்கு நாம் ஒவ்வொருவரும் செவி மடுக்க வேண்டும். கடவுளையும், மனிதனையும், நாம் நேசிக்க வேண்டும். மலைப்பொழிவில் கிறிஸ்துவத்தின் சாராம்சம் உள்ளது. கிறிஸ்தவர்கள் அகிம்சை முறையையே விரும்புவார்கள். அது ஒரு பொழுதும் வலிமையின்மைக்கு அடையாளமாகாது. அகிம்சை என்பது உண்மையின் சக்திக்கு ஆட்படுவதும் நீதி அன்பிற்காகச் செயற்படுவதுமாகும்.

சில சந்தர்ப்பங்களில் வன்முறையில் தொடங்கும் விடுதலைப் போராட்டங்கள் வல்லரசுகளின் ஆதிக்கத்தை உருவாக்குவதற்கு காலாகிவிடும். அமைப்பு ரீதியான புரட்சிக்கு முதல் கலாசார ரீதியான புரட்சி தேவையானதொன்றாகும். மக்கள் மனதில் அடிப்படை மாற்றம் ஏற்படாவிட்டால் புரட்சிகர மாற்றங்கள் மேல்மட்ட மாற்றங்களாக இருக்கும்.

அபிவிருத்தியடையாத நாட்டு இளைஞர்களுக்கு நான் கூறுவது, நீங்கள் அதிகாரம்

அபிவிருத்தியடையாத உலகில் உள்ள அதிகாரம் மிக்கோர் தங்கள் வசதிகளை இழக்க துணிவில்லாத விடத்து அதனுல் பாதிக்கப்படும் கோடிக்கணக்கான மக்களின் துயர் துடைக்க இளைஞர் வன்முறையை நாடும்போது யார் அதை இடை நிறுத்த முடியும். மக்களின் சமத்துவ வாழ்க்கைக்கு எதிராக வன்முறைகள் அதிகரிக்கும் போது உலகின் எல்லாப் பாகங்களிலுமுள்ள இளைஞர் சமூக மாற்றத்தை தேடும்போது யார் அதைத் தடுக்க முடியும்? மூன்ருவது உலக நாடுகளின் துன்பத்தை யார் துடைக்க முன்வருவார்?

வெறும் பேச்சிற்காக வன்முறை பற்றி கதைப்பவர்களை விட, மக்கள் மீட்சிற்காக வன்முறை வழியில் சென்று தம்மைய தியாகம் செய்பவர்களை நான் மதிக்கின்றேன். அருட்திரு. கமில ரொறஸ் அடிகள், சேகுவெரா போன்றவர்கள், மாட்டின் லூதர் கிங்கிற்கு எவ்வளவு மரியாதை செலுத்துகிருேமோ அவ்வளவு மரியாதைக் குரியவர்கள்.

ஆனல் நான் வன்முறை உருவாகக் காலாய்இருப்பவர்களைகுற்றம்சாட்டுகிறேன். ஒருவர் இடது ஆகியிருந்தாலென்ன, வலது பெற முயற்சிக்கும் போது உங்கள் சமூக கலாசார சூழலிற்கேற்ப மாதிரிகளை உருவாக்கி கொள்ளுங்கள். இறக்குமதி செய்யப்பட்ட மாதிரிகளை பயன்படுத்தாதீர். பொருளாதார ரீதியான, பௌதிக ரீதியான அபிவிருத்தியின்மை, கருத்து ரீதியான, ஆன்மீக ரீதியான அபிவிருத்தியின்மையையும் வெளிப்படுத்தலாம்.

அபிவிருத்தியடைந்த நாட்டு இளைஞர்களுக்கு நாம் கூறுவது, நீங்கள் மூன்றும் உலக நாடுகளில் வன்முறைக்கு வித்திட செல்ல வேண்டாம் உங்கள் நாட்டிலேயே உங்கள் மக்களின் மதிப்பீடுகளை மாற்றியமைக்கப் பாடுபடுங்கள். கலாசாரப் புரட்சி எல்லோருக்கும் தேவைப்படுகின்றது.

★

— நன்றி: விழிகாட்டி.

சன்னதி வணங்கி
ப்ரஹாரம் சுற்றி
தெய்வம் கண்டதாய்த்
திரும்பச்
செல்வார்
சுற்றலே
தெய்வமென்று காணாதார்

திருமேனி

# ஒரு மனிதனும் எங்கள் தேசமும்... 7

செழியன்

" இராணுவமோ கடற்படையினரோ " விசாரணை" எனக் கூறி விட்டால் பதில் சொல்ல முடியாமல் தடுமாறவைக்கும் அடுக்கடுக்கான கேள்விக் கணைகளையோ அல்லது சம்பிரதாயத்துக்காவது, நாலு நல்ல வார்த்தைகளை இவற்றையெல்லாம் எதிர்பார்க்க முடியுமா? அப்படி எதிர்பார்த்து ஒரு குடிமகனாவது எங்கள் தேசத்தில் இருக்கின்றனா என்ன? அப்படியும் ஒருவன் இருந்து விட்டால் அவன் நிச்சயமாக ஒரு பைத்தியக்காரனாய் அல்லவா இருக்க வேண்டும். மிருகத்தனமான அடியும் உதையும் , சித்திரவதையும், கொலையும் தானே இவர்களின் விசாரணை என்பதின் பொருள் குறிக்கும் அர்த்தங்கள் ."

கேப்டனின் முன்னால் ரமணியை இழுத்துச் சென்று நிறுத்தியபோது அவன் நிறையவே எதிர்பார்த்தான். இவர்கள் என்னதான் சித்திரவதைகளை செய்தாலும் ரமணியிடம் இருந்து " இல்லை " , "தெரியாது" என்ற பதில்களை விட அதிகமாக வேறு என்ன தகவல்களை பெற்று விட முடியும். இப்படியான சந்தர்ப்பங்களில் விசாரணையின் முடிவில் உயிர் அற்ற

மனித உடல் மிஞ்சி இருப்பதுதான் வழமை.

வங்காள விரிகுடா கடற்பகுதியில் வாழ்கின்ற கடல் மந்துகளுக்கு அடிக்கடி மனித உடல்களை ருசி பார்க்கக் கிடைத்ததால் கடலில் ஒரு படகோ , வள்ளமோ செல்கின்ற போதெல்லாம் மறுபடியும் ஒரு மனித இறைச்சியை எதிர்பார்க்கும் இவைக்கு இன்றும் ஒரு விருந்து கிடைத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மேசைக்கு பக்கமாக நாற்காலியில் அமர்ந்திருந்த கேப்டனின் கண்களை சந்திக்க தயங்கி மேசையின் மேல் இருந்த இயந்திரத் துப்பாக்கியை ரமணி சலனம் இன்றி நோக்கினான். இயந்திரத் துப்பாக்கியைப் பார்ப்பது கூட "பயங்கரவாதி " எனக்கருதப்படுமோ என நினைத்துப் பார் வையை அகற்றி கேப்டனின் தலைக்கு மேல் செலுத்தினான்.

அதுவரை அவனையேபார்த்திருந்து விட்டு " நீர் கொழும்பில் தானே படிச்சனீர்" கேப்டன் கேட்டார்" தெளிவான தமிழ் குரலை கேட்ட போது இது எங்கிருந்து வருகின் றது என ரமணிக்குப் புரியவில்லை. கேப்டனின் முகத்தில் இருந்த புன்னகை இந்த குரல் கேப்டனிடம் இருந்து தான் வந்தி ருக்க வேண்டும்., என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது. அத்து டன் கேப்டனின் முகத்தை பார்க்கின்ற போது முன்பு எங்கோ பார்த்தது போன்றதோர் பிரமை ஏற்பட்டது. அந்த சீருடையின் உள்ளே இருக்கின்ற உருவம் ஒரு சிங்கள இனத்த வரைப் போல் இருந்தது, ஆனால் கேட்ட குரல் தமிழ் குரலாக

இருந்தது. ரமணிக்கு குழப்பமாக இருந்தது. "ஓம்" என்று கேப்டனைப் பார்த்துக் கூறினன்.

" என்னுடைய பெயர் ரஞ்சித். என்னை நீர் மறந்து போய் விட்டீர் போல" கேப்டன் கூறினர்.

ரமணியின் உடலில் இருந்த இரத்தம் அனைத்தும் ஒரே நேரத்தில் தலைக்குள் பாய்வதுபோல ஒரு உணர்ச்சி. ரமணிக்கு ஆச்சரியம் மட்டுமல்ல மகிழ்ச்சியும் கூட. கொழும்பில் அவனுடன் படித்த ரஞ்சித்குமாரை அவனுக்கு நினைவுக்கு வந்து விட்டது. ஆனல் அவன் எப்படி இங்கு கடற்படையில் கேப்டனக ...? ... சாத்தியமா...?

"தெகிவலை ரஞ்சித் குமார் தானே..."

" நானேதான். என்னை இங்கு பார்க்கும் போது ஆச்சரியமாய் இருக்கிறதா? எனக்கும் பல வருடங்களுக்குப் பின் உம்மை இங்கு சந்திப்பதை நினைத்து ஆச்சரியமாய் உள்ளது. ...இரும்.. இந்த கதிரையில் இரும்..." கேப்டன் கூறியபடி எழுந்து கையை நீட்டினர். ரமணியும் உற்சாகமாய் கையை நீட்டிக் குலுக்கிக் கொண்டான். அந்த கைகுலுக்கலின் போது அதுவரை இருந்த அச்சம், பீதி எல்லாம் அடியோடு துடைத்தெறிந்து விட்டான்.

" இப்ப எங்க இந்த படகில் போகிறீர். அகதியாப் போய் தமிழ் நாட்டில் தங்கப் போறீரா?.

ரமணியின் மூளை ரமணியை எச்சரித்தது. ரஞ்சித்தின் முதல் தலைமுறையே வடக்கு கிழக்குடன் இருந்த தொடர்புகளை அறுத்துக் கொண்டு கொழும்பு வாழ்க்கையோடு தம்மை இறுக்கமாக பிணைத்துக் கொண்டு விட்டது. தமிழ் தேசியம், தாயகம், போராட்டம் இவை பற்றிய புரிதல் இவர்களுக்கு இருப்பதற்கு நியாயமில்லை. சிறீலங்கா சீருடையில் இன்று ரஞ்சித் இருக்கின்றான். என்பதே இதற்கு சான்று பகிர்கின்றது. எனவே உண்மைகளை கூறுதே (அதற்கு அவசியமும் இல்லை).

கொழும்பு வாழ்க்கைக்கு பின் ரமணியைப் பற்றி ரஞ்சித் எதுவுமே தெரிந்திருக்கச் சந்தர்ப்பம் இல்லை. இது ரமணிக்கு வாய்ப்பாக இருந்தது.

" யாழ்ப்பாணத்தில் ஒரே பிரச்சனை. ஒவ்வொரு நாளும் உயிரை கையில் பிடித்தபடி தான் சனங்கள் இருக்கினம். மறுநாள் உயிருடன் இருப்பம் என்பது சந்தேகமான விடயமாகப் போய்விட்டது. நானும் இப்பதான் திருமணம் செய்தேன். அதுதான் அவவையும் கூட்டிக் கொண்டு தமிழ் நாட்டிலை போய் உயிரை பாதுகாத்துக் கொண்டு இருப்போம் என்றும், நிலைமை சீராகியதும் வரலாம் என்றும் நினைத்து புறப்பட்டோம். இப்ப உங்களிடம் பிடிபட்டு இருக்கிறம்.

" நிறைய பொது சனங்கள் தங்கட உயிரை பாது காக்க இப்படி படகிலை தமிழ் நாட்டுக்கு போய்க் கொண்டிருக்கினம். உயிரை பாதுகாக்க அபத்தான கடலை

கடக்கின்றனர். கடல்மட்டும் ஆபத்தில் லை ரமணி கடலில் போகும் போது பிடிபட்டால் கடலோடு கடலாயே போக வேண்டி ஏற்படும். இன்றைக்கு இந்த இடத்தில் நான் இல்லை என்றால் உங்கள் அனைவரையும் படகோடு கட்டு கடலில் போட்டுவிட்டு பயங்கரவாதிகளை கொன்றோம் என்று அரசாங்கத்தில் 'பட்டி' வாங்கும் அதிகாரிகளும் உள்ளனர். இதை எல்லாம் நீர் அறிந் திருப்பீர்தானே..... ஏதோ நல்ல காலம்... நீர் மனைவியோடு போகிறீர். விமானத்தில் போயிருக்கலாம் தானே ?

"அதற்கு பாஸ் போட் ஒன்றும் இல்லை. இனி எடுப்பதானால் ஆறு, ஏழு மாதம் போகும் அதனால் தான் புறப்பட்டோம். ஆனால் இப்பதான் யோசிக்கிறன் இப்படி வந்தது தவறு என்று".....

" சரி போகட்டும்.. இப்ப உங்கள் ஒருவருக்கும் ஒரு பிரச்சனையும் இல்லை. ஆனால் உங்கள் அனைவரையும் கரையில கொண்டு போய் கடற்படை தளத்தில் நான் ஒப்படைத்து விடவேண்டும். அங்கு இன்னோர் அதிகாரி உங்களை பொறுப்பேற்பார். எனக்கு எந்த அதிகாரமும் அங்கு இல்லை. நான் ஒன்றுமே செய்ய முடியாது. உங்களைப் பற்றிய றிப்போட்டில் உண்மையான அகதிகள் தான் என்று எழுதியுள்ளேன். படகில் இருந்து ஆயுதங்களோ, வெடிமருந்துகளோ எதுவுமே பிடிபடவும இல்லை எனவே நீங்கள் பயப்படுவதற்கு இனி ஒன்றும் இல்லை. உங்கள் அனைவரையும் விசாரணை... செய்த பின் இரண்டு மூன்று நாளில் விட்டு விடுவார்கள் என்று நான்

 தொடர்ச்சி 12ம் பக்கம்

# ஜஃப்னா ஸ்ரோர்ஸ்

**806 Bloor St. West, Toronto**
**Tel: (416)533-3203**

எங்களிடம் பழைய புதிய
வீடியோ ஓடியோ கசெட்டுகளும்
பெற்றுக் கொள்ளலாம்.

திருமண வைபவங்களுக்கான
அலங்காரப் பொருட்களும் ஆடைகளும்
அழைப்பிதழ்களும் பெற்றுக்கொள்ளலாம்.

VARIOUS CHOICE OF INDIAN & SRILANKAN GROCERIES SPICES. NUTITUTIONAL FOODS CANNED VEGETABLES, FRUITE JUICE AND MANY MORE AT ECONOMICAL PRICES.

## GOOD NEWS

## JAFFNA MOVIE CONVERSION

TRANSFER VIDEO MOVIES THROUGH
NTSC <--> PAL
PAL <--> NTSC
ANY SYTEM --> ANY SYSTEM

அலங்காரங்களும் பொருட்கள் விநியோகம் செய்யப்படும்.

* STRICTLY THE BEST QUALITY GUARANTEED 22Kt GOLD. BANGLES AND ENGAGEMENT RINGS.

* UNBEATABLE LOWEST PRICES

* SPECIALIZED IN MALIYA MUTTU, PRABHA AND THALIKODI CHAINS

* WE DO MINOR REPAIRS AND ADJUSTMENT



# J.P.S. jewellers inc.


5991 VICTORIA Ave., Suit 2
MONTREAL, QUEBEC H3W 2H6
TEL: (514) 343-5333
TELEX: MTL 05-25-134

* உத்தரவாதமுள்ள 22 காரட்டில் அமைந்த வளையல்கள், நிட்சயாச்த்த மோதிரங்கள்.

* மிகக் குறைந்த விலையில்

* தரமான மல்லிகை முத்து, பிரபா மற்றும் தாலிக் கொடி

* மற்றும் சிறு திருத்தவேலைகட்கும்



MONDAY CLOSED
TUESDAY-SATURDAY
10 A.M.-7.30 P.M.
SUNDAY
12 NOON-6 P.M.




# MARCHE VICTORIA ORIENTAL INC.

**TWO LOCATIONS**

**MONTREAL**
6324 VICTORIA STREET,
(METRO: PLAMONDON)
TEL: (514) 737-4716
OPEN 7 DAYS

**WEST ISLAND**
4788 BLVD DES SOURCES,
PIERREFONDS.
TEL: (514) [illegible]
OPEN 7 DAYS
FREE PARKING

மரக்கறி எண்ணெய் MARINA VEG. OIL 15.99
(SRI LANKA) புழுங்கல் அரிசி PARBOILED RICE 20Kg 32.00
பஸ்மதி அரிசி PASMATHI RICE 5kg. 10.99
FIVE ROSE FLOUR 20Kg 13.99

• *WE HAVE THE BEST QUALITY No 1 (stone free) JAFFNA S.R. No 1*
*PARBOILED, RED RICE*

எங்களிடம் தரமான முதல்தரமான கல்லில்லாத S.R.No 1
மற்றும். சிவப்பு.பச்சை சம்பாவும் கிடைக்கும்

WE DO WHOLESALE
BUY IN BULK & GET DISCOUNT

பொருட்கள் தொகையாக வாங்குமிடத்து
மேலதிக கழிவு வழங்கப்படும்.

## **** TAMIL MOVIES 49 C ****

(24 Hours with I.D. only)

தமிழ் வீடியோ படங்கள் 49 சதம்.
(தக்க உரிய அடையாள அட்டையுடன், 24 மணித்தியாலம் மட்டுமே)

# MARCHE VICTORIA ORIENTAL INC.

# தாண்டவம்

விபூதியாய் பூசும்
சந்தனமும் குங்குமமும் -கூடவே
பூவும் வைத்துக் கொள்ளும்
கருவறை சுவாமிக்கு
தீபத்தை ஏற்றுங்கள்
சூடத்தைக் காட்டுங்கள்
கண்களை இறுக மூடி- மெய்மறந்து
உரக்கப் பாடுங்கள் - அவருக்கு
கேட்குமாயின்

கண்களை விழித்து பின்னே பாருங்கள்
சோதியாய்த் தெரியும்
பிரம்ம விஷ்ணுவுக்காய் வளர்ந்த
சோதியல்ல
ஆயிரம் ஆயிரமாய் ஜீவன்களை
எரித்து வளர்த்த சோதி
எங்கும் சோதி
எங்கும் சோதி

உம் இறைவனுக்குச் சொல்லும்
எம் மண்ணில் எங்கும்
மனிதர்கள் எரிந்து பிணக்காடாய்
ஆடுவார் ஆனந்தமாய்.

பா.அ.ஜயகரன்



# பிறந்தநாள் வாழ்த்து..

தனது இரண்டாவது பிறந்த
தினத்தை 28.4.89 அன்று
கொண்டாடும்
அருளானந்தம் - தேவராணி
தம்பதியரின் புதல்வனை

## நிருபனை

அப்பம்மா, அம்மம்மா, பெரியம்மா
மாமாமார் சித்திமாருடன் அம்மாவும்
அப்பாவும் சேர்ந்து 'நீடூழி வாழ்க'
என வாழ்த்துகிறார்கள்..!

# MUKESH JEWELLER



# முகேஷ்

## ஜிவலர்ஸ்

தரமிகுந்த இந்திய
தங்கநகைகளுக்கும்
நங்கையர் நாடும்நவ
நாகரீக தங்க,வைர
வெள்ளி ஆபரணங்க
ளுக்கும், நம்பகரமான
ஒரே ஸ்தாபனம்.
உங்கள் தேவைகட்கேற்ப
ஆபரணங்களை அழகு
பெறத்தயாரிப்பதற்கும் புனரமைப்
பதற்கும் இன்றே நாடுங்கள்

620 கற்காட் வீதி
CATCHCART St.

320 அறை
ROOM

தொலைபேசி
TELEPHONE 861-3110